**சுருக்கம்**

தொழில்நுட்பக் கல்வி – கோயம்புத்தூர், திருநெல்வேலி மற்றும் காரைக்குடியிலுள்ள அரசு பொறியியற் கல்லூரிகள் – கல்லூரிகளின் வளர்ச்சி நிதி மற்றும் சிறப்பு கட்டணத்திலிருந்து ரூ.40.68 இலட்சம் செலவில் மூன்று புதிய பேருந்துகள் கொள்முதல் செய்வதற்கு ஆணை வழங்கப்பட்டது – ரூ.57.00 இலட்சமாக உயர்த்தி திருத்திய ஆணை – வெளியிடப்படுகிறது.

---

உயர்கல்வித் (பி2) துறை

அரசாணை (நிலை) எண்.202

நாள் : 24.08.2011.
ஆவணி, 7,
திருவள்ளுவர் ஆண்டு 2042.

படிக்கப்பட்டவை :–

1. அரசாணை (நிலை) எண்.276, உயர்கல்வித் (பி2) துறை, நாள் 26.08.2010.
2. தொழில்நுட்பக் கல்வி ஆணையரின் கடித எண்.25127/எச்3/2008, நாள் 26.04.2011.

-----

ஆணை :–

மேலே ஒன்றில் படிக்கப்பட்ட அரசாணையில், கோயம்புத்தூர், திருநெல்வேலி மற்றும் காரைக்குடியிலுள்ள அரசு பொறியியற் கல்லூரிகளின் வளர்ச்சி நிதி மற்றும் சிறப்புக் கட்டணத்திலிருந்து, ரூ.40.68 இலட்சம் செலவில், (பேருந்தொன்றுக்கு ரூ.13.56 இலட்சம் வீதம்) அக்கல்லூரிகளுக்கு மூன்று புதிய பேருந்துகள் கொள்முதல் செய்வதற்கு, ஆணை வெளியிடப்பட்டது.

2. மேலே இரண்டில் படிக்கப்பட்ட கடிதத்தில், தேவைப்பொருட்கள் மற்றும் விநியோகத்திற்கான பொது இயக்ககத்தின் ஒப்பந்த விலையின்படி, [Directorate of Supplies and Disposal (DGS&D) Rate Contract] தற்போது பேருந்தின் விலை நிர்ணயம் செய்யப்படுவதில்லை என்பதாலும், பேருந்து ஒன்றின் தற்போதைய விலை ரூ.19.00 இலட்சம் என்பதாலும், பேருந்து ஒன்றுக்கு கூடுதலாக ரூ.6.00 இலட்சம் தேவைப்படுகிறது என்றும், எனவே, மேலே ஒன்றில் படிக்கப்பட்ட அரசாணையில், கல்லூரிகளின் வளர்ச்சி நிதி மற்றும் சிறப்பு கட்டணத்திலிருந்து தலா ரூ.13.56 இலட்சம் வீதம் மூன்று பேருந்துகள் கொள்முதல் செய்வதற்கு ஒப்புதல் வழங்கப்பட்ட ரூ.40.68 இலட்சத்தை, ரூ.57.00 இலட்சமாக உயர்த்தி, ஒப்புதல் வழங்குவதற்கு திருத்திய ஆணை வழங்குமாறு, தொழில்நுட்பக் கல்வி ஆணையர் அரசினை கேட்டுக் கொண்டுள்ளார்.

3. மேலே பத்தி 2–இல் உள்ள தொழில்நுட்பக் கல்வி ஆணையரின் கருத்துருவின் அடிப்படையில், கோயம்புத்தூர், திருநெல்வேலி மற்றும் காரைக்குடியிலுள்ள அரசு பொறியியற் கல்லூரிகளின் வளர்ச்சி நிதி மற்றும் சிறப்புக் கட்டணத்திலிருந்து, ரூ.40.68 இலட்சம் (பேருந்தொன்றுக்கு ரூ.13.56 இலட்சம்) செலவில் அக்கல்லூரிகளுக்கு மூன்று புதிய பேருந்துகள் கொள்முதல் செய்வதற்கு, மேலே ஒன்றில் படிக்கப்பட்ட அரசாணையில், வழங்கப்பட்ட ஒப்புதலை, ரூ.57.00 இலட்சமாக, (தலா ரூ.19.00 இலட்சம் வீதம் மூன்று பேருந்துகளுக்கு ரூபாய் ஐம்பத்தேழு இலட்சம் மட்டும்) உயர்த்தி அரசு ஆணையிடுகிறது.

............2.

4. புதிய பேருந்துகள் வாங்குவது குறித்த நடைமுறை விதிகளை பின்பற்றுமாறு தொழில்நுட்பக் கல்வி ஆணையர் அறிவுறுத்தப்படுகிறார்.

5. இவ்வாணை நிதித்துறையின் அ.சா.கு. எண்.1864/FS/P/2011, நாள் 29.07.2011 இசைவுடன் வெளியிடப்படுகிறது.

(ஆளுநரின் ஆணைப்படி)

ரா.கண்ணன்,
அரசு முதன்மைச் செயலாளர்.

பெறுநர் :-
தொழில்நுட்பக் கல்வி ஆணையர், சென்னை-25.
முதல்வர், அரசுப் பொறியியற் கல்லூரி, கோயம்புத்தூர் / திருநெல்வேலி / காரைக்குடி.
மாநில கணக்காயர், சென்னை-18.
சம்பளக் கணக்கு அலுவலர், சென்னை-35.
கருவூல அலுவலர், கோயம்புத்தூர் / திருநெல்வேலி / காரைக்குடி.
நகல் :-
நிதித் (கல்வி-1) துறை, சென்னை-9.
உயர்கல்வி (ஏ) துறை, சென்னை-9.
உள் (போக்குவரத்து) துறை, சென்னை-9.
இ.கோ./உதிரி.

//ஆணைப்படி/ அனுப்பப்படுகிறது//

24.8.11
பிரிவு அலுவலர்.